## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## MCOP. No. 399/2024

2025-ம் வருடம் அக்டோபர் திங்கள் 08-ம் நாளன்று மனுதாரர் / எதிர்மனுதாரர் சாட்சியாக ம.சா.2 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.இந்துமதி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: பாலசந்திரன்** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | **வட்டம்** | : |
| **முகவரி** | : | **மதம்** | : |
| **ஜாதி** | : | **வயது** | : |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 3 ஆம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மனுதாரர் அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை பெறவில்லை. விபத்து குறித்து நான் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. விபத்து இரவு 9.00 மணிக்கு நடைபெற்றது. நெரூர்-கரூர் ரோடு காளிப்பாளையம் ரோட்டில் இருட்டாக

இருக்கும் என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் நீங்கள் எந்த வாகனத்தில் சென்றீர்கள் என்ற விவரம் உங்களது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட நபருக்கு முகத்திலும், பின் தலையில் மட்டும் காயம் என்று சொன்னால் சரியல்ல அவருக்கு உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. அவர் எனக்கு முன்னால் என்னை முந்தி சென்ற தூரம் சுமார் 10 அடி இருக்கும். நான் தார்சாலையில் சென்று கொண்டிருந்தேன். என்னை எனது வலது புறத்தில் 1, 2 அடி தாண்டி சென்றிருப்பார். விபத்து சமயத்தில் இறந்துபோனவர் TVS XL Heavy Duty வாகனத்தில் எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்தார். உங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த TVS XL Heavy Duty இன்டிகேட்டர் இருந்ததா என்று சொன்னால் அதை நான் கவனிக்கவில்லை. அது பழைய வண்டி ஆகும். TVS XL Heavy Duty வாகனத்தை ஓட்டி சென்றவர் தலைக்கவசம் அணிந்து சென்றதாக தவறாக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இறந்தவருக்கு தலையில் மட்டுமே காயம் தலைக்கவசம் அணிந்திருந்தால் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கண்ணுற்ற சாட்சி இல்லை என்றும் ஆகையால் தான் காவல்நிலையத்தில் புகார் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் மனுதாரருக்கு ஆதரவாக பொய்சாட்சியம்

அளிக்கிறனே் என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

விபத்து சமயத்தில் எனக்கு முன்னால் சென்ற TVS XL Heavy Duty–ல் முகப்பு விளக்கும், நானும் TVS XL Heavy Duty புதிய வண்டியில் முகப்பி விளக்கு வெளிச்சத்துடன் சென்ற போது தான் விபத்து ஏற்பட்டது. யமஹா வாகனத்திலும் முகப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. விபத்து சமயத்தில் விபத்தை பார்க்கக்கூடிய அளவில் வெளிச்சம் இருந்தது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

விபத்து சமயத்தில் உங்களுக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனம் எந்தவித சமிக்கையும் செய்யாமல் திடிரென்று வலது பக்கம் திரும்பியதால்தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடைபெற்ற இடம் நேரான சாலை. ஆகையால் அங்கு திரும்ப வேண்டிய அவசியமில்லை. உங்களுக்கு முன்னால் சென்ற TVS XL Heavy Duty –ல் சென்றவர் தான் கடந்து சென்று விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.